



பாடம் 11 ஜூன்
13, 2026

# பின்னடைவுகள்







"அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும், உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம். மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்தஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது." (ரோமர் 5:3-5)





பாவமும் பாடுகளும் நிறைந்த உலகத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தேவனுடைய அன்பை குறித்து நம்மை கேள்வி எழுப்ப தூண்டும் வகையிலான சிரமங்களை நாம் அனைவரும் ஏதோ ஒரு கட்டத்தில் எதிர்கொள்கிறோம்.

இந்த தடைகளுக்கு எவ்வாறு நாம் எதிர்வினையாற்றுகிறோம்?

பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகளை வேதாகம கதாபாத்திரங்கள் எவ்வாறு எதிர்கொண்டார்கள் என்பதையும், அத்தகைய சூழல்களை நாமும் எதிர்கொள்ள அவர்களின் முன்மாதிரி எவ்வாறு உதவும் என்பதையும் நாம் ஆராய்வோம்.

**வாழ்க்கை புயல்கள்**



**நோய்கள்**



**பேரழிவுகள்**




**ஏமாற்றங்கள்**




**இயேசுவை காணுங்கள்**






# வாழ்க்கை புயல்கள்

"அப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டாகி,படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் அதின்மேல் மோதிற்று." (மாற்கு 4:37)



திறமையான மீனவர்களான பேதுரு, அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோருக்கு, நள்ளிரவில் - அதுவும் ஒரு புயலுக்கு மத்தியிலும் - கலிலேய கடலைக் கடப்பது ஒன்றும் புதிதான விஷயமாக இருக்கவில்லை.

இருப்பினும், புயல் அவர்களை நிலைகுலைய செய்தது. காற்று அவர்களை கொந்தளிக்க செய்ததால், படகிற்குள் நீர் புகுந்து அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டது. அப்போது அவர்கள் உணர்ந்து கொண்டனர்... இயேசு எங்கே இருக்கிறார்? அவர் தூங்கி கொண்டிருக்கிறாரா? அவர் ஏன் நமக்கு உதவவில்லை? நமக்கு என்ன நேரிடுகிறது என்பது பற்றி அவருக்கு கவலை இல்லையா? (மாற்கு 4:35-38).



நம் வாழ்வில் நாம் புயல்களை கடந்து செல்கிறோம். நாம் இயேசுவிடம் உதவி கேட்கிறோம், ஆனால் அவரோ தூங்கி கொண்டிருப்பது போல் தோன்றுகிறது. அவருடைய பிரசன்னத்தை நாம் உணர்வதில்லை. ஆனாலும், அவர் அங்கேயே இருக்கிறார்.

நமது புயலை கடிந்துகொள்வதற்கான தருணத்திற்காக காத்திருங்கள்: "இரையாதே, அமைதலாயிரு" (மாற்கு 4:39). அவர் நம்மை விசாரிக்கிறவர் (1 பேதுரு 5:7). அவரால் நம் புயல்களை அமைதிபடுத்த முடியும். அவர் அவ்வாறு செய்யும் போது அவரை துதிக்க மறக்காதீர்கள் (மாற்கு 4:40-41).




# நோய்கள்

"ஜனக்கூட்டத்துக்குள்ளே அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள்." (மாற்கு 5:28)



பன்னிரெண்டு ஆண்டுகளாக இரத்தபோக்கு நோயால் அவதிப்பட்டும், அதை குணப்படுத்தக்கூடிய மருத்துவர் எவரையும் காணமுடியாத நிலை அந்த பெண்ணை வறுமையிலும் நம்பிக்கையற்ற நிலையிலும் ஆழ்த்தியிருந்தது(மாற்கு 5:25-26). இன்றும், இலவச மறுத்துவ காப்பீடு இல்லாத நாடுகள் உள்ளன, எனவே இந்த கதை இப்போதும் ஒரு யதார்த்தமாக இருக்கலாம்.



எது எப்படியாயினும், நோய் நம்மை சிறைப்படுத்தி முச்சுத்திணற செய்யும், அதே வேளையில் எவ்வித நிவாரணமும் கிடைக்காத சூழல்களை நாம் அனைவரும் எதிர்கொள்ள நேரிடலாம்.

இயேசுவிடம் அந்த பெண் தீர்வை கண்டாள், அவளுடைய விசுவாசம் அவளை காப்பாற்றியது(மாற்கு 5:27-29).



இயேசு நம்மை சுகப்படுத்த திறமையான மருத்துவர்களை பயன்படுத்தலாம் அல்லது நம்மிடம் ஒரு நேரடி அற்புதத்தை செய்யலாம் என்பதை நாம் நம்ப வேண்டும்.



எது எப்படியாயினும், நம்முடைய சுமைகள் மற்றும் கவலைகள் அனைத்தையும் அவர்மீது விட்டுவிடுமாறு இயேசு நம்மை அழைக்கிறார்(மத். 11:28-30).

# பேரழிவுகள்

"இந்த என் தோல்முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன்." (யோபு 19:26)



போர், வன்முறை, மற்றும் இயற்கை பேரிடர்கள் யோபின் வாழ்க்கையை அடியோடு மாற்றியமைத்தன (யோபு 1:13-19). இயற்கை சார்ந்ததாகவோ அல்லது இவ்வுலகில் நிலவும் தீமையால் விளைந்ததாகவோ இருந்தாலும், நாம் அனைவரும் பேரிடர்களுக்கு ஆளாகிறோம்.

நாம் எப்படி எதிர்வினையாற்றுகிறோம்? யோபு எப்படி எதிர்வினையாற்றினார்?



அவர் தேவனை குறைகூறவும் இல்லை, அவரை நிராகரிக்கவும் இல்லை

அவர் தன் முழு பலத்துடனும் அவரைப் பற்றிக் கொண்டார்

மிகவும் இருண்ட தருணங்களிலும் அவர் தேவன் மீது நம்பிக்கை வைத்தார்

அவர் ஒரு சிறப்பான எதிர்காலத்தை நோக்கி தன் கவனத்தை திருப்பினார்(யோபு 19:25-27)

நாம் மனசோர்வடையாமல் இருந்தால், நம்முடைய மிக கடினமான சோதனைக் காலங்களிலும் தேவன் எப்போதும் நம்மோடு இருக்கிறார் என்பதை உணர்வோம், அவர் நம்மை நேசிக்கிறார், பலவீனத்திலிருந்து பலத்தையும், சோர்விலிருந்து துணிச்சலையும், பேரிடரிலிருந்து நம்பிக்கையையும் பெற அவர் நமக்கு வலிமையளிக்கிறார்(யோவேல் 3:10; ரோ. 5:3-5).

நீங்கள் கடினமான காலகட்டத்தைக் கடந்து கொண்டிருக்கிறீர்கள் என்றால், உங்கள் மீது தேவன் கொண்டுள்ள அன்பும் அக்கறையுமே உங்கள் வாழ்க்கையில் மிகவும் பாதுகாப்பான மற்றும் நிலையான விஷயம் என்பதை சிந்தித்து பாருங்கள்.

# ஏமாற்றங்கள்

"அவரே இஸ்ரவேலை மீட்டிரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம்...." (லூக்கா 24:21மு)







கண்ணோட்டம்: இயேசு இஸ்ரவேலை மிட்கவிருக்கும் மேசியா. யதார்த்தம்: அவர் மரித்துவிட்டார் (லூக்கா 24:18-21).

அவர்களின் ஏமாற்றம் எந்தளவுக்கு பெரிதாக இருந்ததென்றால், இயேசுவின் உயிர்தெழுதல் குறித்த மிக தெளிவான சான்றுகளை கூட அவர்களால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை(லூக் 24:22-24).

இயேசு பொறுமையுடன் அவர்கள் தங்கள் நம்பிக்கையை மீண்டும் பெற உதவினார். இறுதியாக, "அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது" (லூக்கா 24:31) , மேலும் ஏமாற்றமடைந்திருந்தவர்களை உற்சாகப்படுத்த அவர்கள் ஒடினார்கள் (லூக்கா 24:32–35; 2 கொரி 1:4). அவர்களின் அனுபவத்திலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?







- சந்தேகம் நம் மனங்களில் வேரூன்ற நாம் அனுமதிக்கக்கூடாது
- நமது ஏமாற்றங்களின் போதும் இயேசு நம்முடன் நடந்து வருகிறார்
- நாம் அவரை அனுமதித்தால், அவர் நமது குழப்பங்களை தெளிவுப்படுத்துவார்
- நமது யதார்த்த நிலை என்னவென்பதை நம்மைவிட இயேசு நன்றாக அறிவார்

# இயேசுவை காணுங்கள்

"ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்." (ரோமர் 8:18)

எலன் ஜி உவைட் மிகுந்த மனசோர்வில் இருந்த போது, இயேசுவை காணும் ஒரு தரிசனம் அவருக்கு கிடைத்தது.

அவர் அனுபவித்துக் கொண்டிருந்த அனைத்தையும் இயேசுவும் அறிந்திருக்கிறார் என்பதை அவர் உணர்ந்துகொண்டார். ஒரு கட்டத்தில், அவருடைய தலையின் மீது தம் கையை வைத்து, இயேசு அவரிடம், "பயப்படாதே" என்று கூறினார்

அவர் மகிமையான காட்சிகளை கண்டார், பரலோகத்தின் பாதுகாப்பையும் அமைதியையும் தான் அடைந்துவிட்டதாக அவருக்கு தோன்றியது.

இந்த கனவு அவருக்கு நம்பிக்கையையும் விசுவாசத்தையும், அத்துடன் அவர் தேவனை நம்பலாம் என்ற உறுதியையும் அளித்தது.



"அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த்தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்." (ரோமர் 8:28)

"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்." (பிலிப்பியர் 4:6-7)

"என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது. [...] சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்." (யாக்கோபு 1:2-4, 12)



"அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்." (2 கொரிந்தியர் 12:9)

“அனைவரின் வாழ்விலும் ஆழ்ந்த ஏமாற்றமும் மிகுந்த மனச்சோர்வும் நிறைந்த தருணங்கள் வருகின்றன; துயரமே பங்காக அமையும் நாட்களும், பூமியில் பிறந்த தம் பிள்ளைகளுக்குத் தேவன் இன்னமும் அன்பான நன்செய்பவராக இருக்கிறார் என்பதை நம்புவது கடினமாகத் தோன்றும் நாட்களும் உண்டு; துன்பங்கள் ஆன்மாவை வாட்டி வதைத்து, வாழ்வைவிட மரணமே மேலானது என்று தோன்றச் செய்யும் நாட்களும் வருகின்றன. அத்தகைய வேளைகளில்தான் பலர் தேவன் மீதான பிடிப்பை இழந்து, சந்தேகத்திற்கும் அவிசுவாசத்திற்கும் அடிமைகளாகிவிடுகிறார்கள். அத்தருணங்களில், தேவனுடைய வழிநடத்துதல்களின் அர்த்தத்தை ஆவிக்குரிய கண்ணோட்டத்துடன் நம்மால் புரிந்துகொள்ள முடிந்தால், நம்மை நாமே அழித்துக்கொள்வதிலிருந்து நம்மைக் காக்கத் துடிக்கும் தேவதூதர்களையும், நித்திய மலைகளைவிடவும் உறுதியான ஓர் அடித்தளத்தின் மீது நம் பாதங்களை நிலைநிறுத்த அவர்கள் பாடுபடுவதையும் நாம் காண்போம்; அப்போது புதிய விசுவாசமும் புதிய வாழ்வும் நம்முள் மலரும்.”

எலன் ஜி உவைட் (தீர்க்கதரிசிகளும் இராஜாக்களும், பக். 163)